[2002 அக்டோபர் 25

18—

கால்நடை மருத்துவமனை

***6961—திரு. செ. அண்ணாதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் கால்நடை மருத்துவ நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. செ. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதி காடுகள் நிறைந்த தொகுதி. எனவே, கால்நடை வளர்ப்பதற்கு ஏற்ற சூழல் இருப்பதால், இங்கு அதிக கால்நடைகள் உள்ளன. ஜெயங்கொண்டம் தொகுதிக்கு உட்பட்ட ஜெயங்கொண்டம் ஒன்றியம், தா. பழூர் ஒன்றியங்களிலே தலா இரண்டு கால்நடை மருத்துவமனைகள் உள்ளன. இவை இரண்டும் தொகுதியினுடைய மையப் பகுதியில் அமையாததால், அந்தக் கால்நடைகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு, சுமார் 30 கிலோமீட்டர் தூரம் உள்ளதால், கால்நடைகளின் நலன் கருதி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு, இரண்டு ஒன்றியங்களின் மையப் பகுதியான கங்கைகொண்டசோழபுரம் மற்றும் திருப்புரந்தான் ஆகிய இடங்களில் வரும் நிதியாண்டில் மருத்துவமனை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில், பெரியவளையம் என்னும் ஊரில் கால்நடை மருத்துவமனை ஒன்று உள்ளது. மேலும், தா. பழூர், கோடாலிகருப்பூர். விக்கிரமங்கலம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், கங்கைகொண்டசோழபுரம், உடையார்பாளையம், திருப்புரந்தான், வடவாறு தலைப்பு, உள்ளியங்குடி மற்றும் எரவாக்குடி ஆகிய இடங்களில் கிளை நிலையங்களும் உள்ளன.

2002 அக்டோபர் 25]

மேலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அடிப்படையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு புதியதாக கால்நடை மருத்துவமனையோ, கிளைநிலையமோ திறக்கப்பட வேண்டுமென்றால் அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டுமென்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

19 –

கட்டடங்கள்

***15185 – திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம், கயத்தாறு, கழுகுமலை போன்ற இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் இல்லங்களுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருமா?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு சீர்மரபினர் மாணவர் விடுதி ரூ.31.50 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கழுகுமலை மற்றும் ஒட்டப்பிடாரம் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் நடப்பு நிதியாண்டில் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நித்தம் வணங்கும் அம்மாவை வணங்கி, ஒட்டப்பிடாரம் தொகுதியிலே 5 அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் இல்லங்கள் உள்ளன. அவை அனைத்தும் வாடகைக் கட்டடத்தில்தான் செயல்பட்டு வருகின்றன. இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த